செ.வெ.எண்: 16 நாள்: 05.02.2017

# பத்திரிகைச் செய்தி

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்டுள்ள நீதிப்பேராணை மனு W.P(M.D) No:16485/2015 நாள்:31.01.2017-ன் படி வழங்கப்பட்டுள்ள உத்தரவின்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் வருவாய்த்துறை, நகராட்சி, பேருராட்சி, கிராம ஊராட்சிகளில் தனியாருக்கு சொந்தமான பட்டா இடங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்கள் அனைத்தையும் வருகின்ற 07.02.2017-க்குள் நிலத்தின் உரிமையாளர்கள் தங்கள் சொந்த செலவில் வேருடன் வெட்டி அப்புறப்படுத்திட தெரிவிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட துறையின் மூலம் அவை அகற்றப்பட்டு அதற்கான செலவுத்தொகையை மாட்சிமை தாங்கிய சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் உத்தரவின்படி இரண்டு மடங்காக நிலத்தின் உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

மேற்காணும் தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**